உயர்நிலை 2

மரபுத்தொடர்கள் 16 – 20 / 29 – 38

இணைமொழிகள் 11 – 12 / 17 – 22

உவமைத்தொடர்கள் 10 – 12 / 17 - 22

பழமொழிகள் 13 – 15 / 20 - 27

**மரபுத்தொடர்கள்**

16.சிட்டாய்ப் பறத்தல் - விரைந்து செல்லுதல்

பள்ளி முடிந்ததும் மாணவர்கள் வீட்டிற்குச் சிட்டாய்ப் பறந்தனர்.

17.செவி சாய்த்தல் - கவனமாகக் கேட்டல்

தாயாரின் அறிவுரைகளுக்குச் செவி சாய்த்த சங்கர் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றான்.

18.தட்டிக் கேட்டல் - கண்டித்தல்

நண்பன் தவறு செய்தால் தட்டிக் கேட்டுத் திருத்துபவனே உண்மையான நண்பன்.

19.தட்டிக் கொடுத்தல் – பாராட்டுதல்

வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவரை ஆசிரியர் பாராட்டித் தட்டிக் கொடுத்தார்.

20.தட்டிப் பறித்தல் – பிடுங்குதல்

குமரன் வைத்திருந்த வாழைப்பழத்தைக் குரங்கு தட்டிப்பறித்தது.

29.ஆணித்தரம் - உறுதி

தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை ஆணித்தரமாகக் கூறி உண்மையை மெய்ப்பித்தாள் கண்ணகி.

30.ஆறப்போடுதல் - தள்ளிப்போடுதல்

எந்தக் காரியத்தையும் உடனடியாகச் செய்யாமல் ஆறப்போடுவதால் நன்மையைவிட தீமையே அதிகம்.

31.இனிக்கப் பேசுதல் - அன்பாகப் பேசுதல்

திருடன் இனிக்கப்பேசிக் குழந்தையை ஏமாற்ற முயன்றான்.

32.ஈடுகட்டுதல் - சரி செய்தல்

கோபு பாபுவின் பேனாவைத் தொலைத்ததால் அதனை ஈடுகட்ட இரண்டு வெள்ளி கொடுத்தான்.

33.உரித்து வைத்தல் - ஒத்து இருத்தல்

இரட்டைச் சகோதரர்களான மணியும் மாறனும் ஒருவரை ஒருவர் உரித்து வைத்ததுபோல இருந்தனர்.

34.ஓட்டம் பிடித்தல் - ஓடிவிடுதல்

குற்றச் செயல்களில் ஈடுபட்ட இளையர்கள் சிலர் காவலரைக் கண்டதும் ஓட்டம் பிடித்தனர்.

35.ஓய்வு ஓழிச்சல் இன்றி – ஓய்வில்லாமல்

சம்பளத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தவர் பாலன்.

36.கண்ட துண்டம் - துண்டு துண்டாக

* தீவிரவாதத் தாக்குதலுக்கு உள்ளான இரட்டைக் கோபுரம் கண்ட துண்டமாகக் கிடந்தது.

* தனக்குத் தீங்கிழைத்தவர்களைக் கண்ட துண்டமாக வெட்டுவேன் என்று சூளுரைத்தான் பாண்டியன்.

37.கதை கட்டுதல் - இல்லாததைச் சொல்லுதல்

மாலாதான் அந்தப்புத்தகத்தைக் கிழித்தாள் என்று அவள் மீது பொறாமை கொண்ட கலா கதை கட்டிப்பேசினாள்.

38.கரிபூசுதல் - அவமானம் ஏற்படுத்துதல்

ஆனந்தன் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று, தேர்வில் தோல்வி அடைவான் என்று கூறியவர் முகத்தில் கரி பூசினான்.

**இணைமொழிகள்**

11.கண்ணீரும் கம்பலையும் - அழுது புரண்டு

கணவனை இழந்த கண்ணகி கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள்.

12.கண்ணும் கருத்தும் - கவனத்தோடு

கமலா கண்ணும் கருத்துமாகப் படித்ததால் முதல் மதிப்பெண் பெற்றாள்.

17.இல்லாததும் பொல்லாததும் - பொய்யாகச் சொல்லுதல்

பாலு கோபு மீது கோபம் கொண்டதால் அவனைப்பற்றி ஆசிரியரிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி மாட்டி விட்டான்.

18.இளைத்துக் களைத்து - சோர்வாக

ஓய்வும் உறக்கமும் இல்லாது தேர்வுக்காகத் தொடர்ந்து படித்த பாலா இளைத்துக் களைத்துக் காணப்பட்டான்.

19.உயிரும் உடலும் - நெருக்கமாகஜானும் அலியும் வேறு வேறு இனத்தினராக இருந்தாலும் உயிரும் உடலுமாகப் பழகுவர்.

20.உற்றார் உறவினர் - நண்பர்களும், சொந்தக்காரர்களும்மாலாவின் பிறந்த நாளுக்கு அவளுடைய உற்றார் உறவினர்கள் அனைவரும் வந்திருந்து வாழ்த்தினர்.

21.கனவோ நனவோ - அதிசயப்படத்தக்க

வகையில்செந்தோசாவின் நீரூற்று நடனத்தைப் பார்த்த வெளிநாட்டவர், இது கனவோ, நனவோ என்று அதிசயித்தனர்.

22.குறுக்கும் நெடுக்கும் - ஒழுங்கின்மைவெளியில் செல்லும்போது சாலைவிதிகளைப் பின்பற்றாமல் குறுக்கும் நெடுக்கும் நடக்கக்கூடாது.

உவமைத்தொடர்

10.கண்ணினைக் காக்கும் இமை போலதாய் தன் பிள்ளையைக் கண்ணினைக் காக்கும் இமை போலக் காத்தாள்.

11.கலங்கரை விளக்கம் போலதிரு.நாராயணப்பிள்ளை சிங்கப்பூர்த் தமிழர்களுக்குக் கலங்கரை விளக்கம் போலத் திகழ்ந்தார்.

12.கன்றினைக் கண்ட பசுபோலகாட்டில் தன்னைத் தேடிவந்த பரதனைக் கண்ட இராமன் கன்றினைக் கண்ட பசுபோல ஓடித் தழுவிக்கொண்டான்.

17.அடுத்தது காட்டும் பளிங்கு போலவிபீடணனைக் கண்ட இராமன் அடுத்தது காட்டும் பளிங்குபோல அவன் உள்ளத்தில் உள்ளதைப் பார்வையிலேயே அறிந்துகொண்டான்.

18.ஆனைவாயில் போன கரும்பு போலபாலுவிடம் கொடுத்த பணம் ஆனைவாயில் போன கரும்புபோலத் திரும்பப் பெற முடியாது.

19.கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலதேர்வுக்குத் தொடக்கத்திலிருந்தே படிக்காமல் இறுதி நேரத்தில் படிப்பது கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போன்றது.

20.கரும்பு தின்னக் கூலி கேட்டாற்போலகரும்பு தின்னக் கூலி கேட்டாற்போலத் தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்குச் சிலர் வெகுமதியும் கேட்கின்றனர்.

21.கனியிருப்பக் காயை விரும்புவது போலநல்ல சொல் இருக்கும்போது தீய சொல்லைப் பயன்படுத்துவது கனியிருப்பக் காயை விரும்புவது போன்றது.

22.கல்மேல் செதுக்கிய எழுத்துப்போலஆசிரியர் சொல்லித் தந்த பாடம் எனக்குக் கல்மேல் செதுக்கிய எழுத்துப் போல என் மனத்தில் பதிந்தது.